புதுக்கோட்டை மாவட்டத்தில் – வெடிமருந்து தொழிற்சாலை விபத்தில் காயமடைந்து

# சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 8 –

புதுக்கோட்டை மாவட்டத்தில் 30.7.2023 அன்று வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்த அறிக்கை வருமாறு:–

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான வெடிமருந்து தொழிற்சாலையில் கடந்த 30.7.2023 அன்று ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஐந்து நபர்களில் கோவில்பட்டியைச் சேர்ந்த வீரமுத்து, (த/பெ. கருப்பையா) (வயது 31) என்பவர் 3.8.2023 அன்றும், திருமலை, (த/பெ. ஆறுமுகம்) (வயது 30) என்பவர் 4.8.2023 அன்றும், வெள்ளனூரைச் சேர்ந்த சுரேஷ், (த/பெ. பழனி) (வயது 35) என்பவர் இன்றும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வைரமணி மற்றும் குமார் ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இருவருக்கும் தலா 1 இலட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

பகுதி, ஒன்றிய, பேரூர் வாரியாக நடைபெறுகிறது!

# நெல்லை மத்திய மாவட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.ஆக.8-

கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்கள் தலைமையில் வருகிற 17.08.2023 அன்று இராமநாதபுரத்தில் நடைபெறும் தென் மண்டல (BLA2) பாக முகவர்கள் பாசறை கூட்டத்தில் நெல்லை மத்திய மாவட்டத்தில் உள்ள திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாக முகவர்களை அழைத்து செல்வது சம்பந்தமாக மாநகர பகுதி, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்களுடன் கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவின்படி கீழ்க்கண்டவாறு பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.



இதில் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். எனவே பாக முகவர்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் கேட்டு கொண்டுள்ளார்.

அதன்படி இன்று (08.08.2023 செவ்வாய்க் கிழமை) மாலை 5 மணிக்கு சங்கர்நகர்(பேரூர்)நாரணம்மாள்புரம் (பேரூர்) ராமையன்பட்டி (ஊராட்சி) ராஜவல்லிபுரம்(ஊராட்சி)சுபம் திருமண மண்டபம் தாழையூத்து.

09.08.2023 புதன்கிழமை மாலை 5 மணி மானூர் (கிழக்கு)ஒன்றியம் சேசுராஜன் மஹால் மானூர். 10.08.2023 வியாழக்கிழமை மாலை 5 மணி மானூர் (மேற்கு)ஒன்றியம் சேசுராஜன் மஹால் மானூர். 11.08.2023 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி மானூர் (தெற்கு) ஒன்றியம் சமுதாய நலக்கூடம் சுத்தமல்லி.

12.08.2023 சனிக்கிழமை மாலை 5 மணி மேலப்பாளையம்(பகுதி) ஏ.ஆர்.எம். கல்யாண மண்டபம் சந்தை ரோடு மேலப்பாளையம். 12.08.2023 சனிக்கிழமை இரவு 7 மணி நெல்லை பேட்டை (பகுதி) வி.பி.மஹால் தெற்கு ரத வீதி திருநெல்வேலி டவுன். 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தச்சநல்லூர்(பகுதி) முத்துஅபிராமி பி.வி.டி.தியேட்டர் ஜங்ஷன். 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி பாளையங்கோட்டை (பகுதி) வீரபாண்டியன் மஹால் பாளையங்கோட்டை.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி நேற்று (07.08.2023) புதுடெல்லி வைகை, பொதிகை தமிழ்நாடு இல்லங்களில் அலங்கரிக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிரிராஜன், வேலுச்சாமி, அப்துல்லா, பார்த்திபன், தமிழ்நாடு இல்லம் கூடுதல் உள்ளுறை ஆணையர் சின்னதுரை மற்றும் கூடுதல் இயக்குநர் பொ.முத்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

# தாய்மையும் கலைஞரும் ஒன்று!

தாய்மையும்
கலைஞரும்
ஒன்று

தாய் பேரன்பில்
பிள்ளைகளின் பெரும் பிழையையும்
ஏற்றுக்கொண்டு விடுவாள்

கலைஞரும் அப்படித்தான்
எதிரிகள்,
நண்பர்கள்,
மக்கள் செய்யும் பிழைகளையுமே
கூட பொறுத்துக்கொள்வார்

தாயும் கலைஞரும்
குற்றவாளிகள்தான்

சுடுமணலில் நாம் நின்றால்
செருப்பாக மாறினார்

புயலிலே சிக்கிய போது
கட்டுமரமாய் மாறி
கரை சேர்த்தார்

எளியவன் துயருற்றபோதெல்லாம்
அவனுக்கு துணை நின்றார்

மூச்சு விட சிரமப்பட்டபோது
உயிர்காற்றாய் உயிர் தந்தார்

எல்லாமே

யாரும்
கேட்காமலே



ஒரு தாயைப்போல
கலைஞரும் செய்தார்

அதனால்தானோ
என்னவோ

தாயின் அருமை பெருமை தெரியாத
தற்குறி பிள்ளைகள் போல

நாம் கலைஞரையும் அறியாமல்
போனோம்

காலம் கடந்துவிட்டது
கலைஞரும்
காற்றில் மறைந்து போனாலும்

தாயை இழந்து
இன்று
நினைத்து கதறும் பிள்ளைகளை
போல

கலைஞரை நினைத்து
கதறுது தமிழ் மக்கள் உலகு

**குளித்தலை மனோ**

